## பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 26 ஜுலை 2017

Good Food, Good Life

**இலங்கையின் சார்பில் முதலாவது Master Brand விருதை வென்றுள்ள மைலோ 'Global Master Brand' என்ற விருதை தனதாக்கியுள்ளது**

மைலோ என்ற வர்த்தகநாமத்தைப் பொறுத்தவரையில் விருதுகளை அள்ளிக்குவித்துள்ள ஒரு ஆண்டாக இந்த ஆண்டு மாறியுள்ளதுடன், அந்த வரிசையில் இலங்கையின் 'Global Master Brand' என்ற மற்றுமொரு புதிய விருதையும் அது வென்றுள்ளது. அதியுயர் தரம் கொண்ட உற்பத்திகளை விநியோகித்து, அடிமட்டத்தில் பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளில் நுகர்வோருடன் தனது இணைப்பை வலுப்படுத்துவன் மூலமாக பெரும் எண்ணிக்கையானோரின் வாழ்வை எட்டுவதற்காக வர்த்தகநாமம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளுக்கு இனங்காணல் அங்கீகாரம் வழங்கும் வகையில் அண்மையில் இடம்பெற்ற அங்குரார்ப்பண Master Brand விருதுகள் நிகழ்வில் இந்த வெற்றியை மைலோ ஈட்டியுள்ளது.

World Marketing Congress அமைப்பினால் இந்த சர்வதேச விருது இலங்கையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளதுடன், Chief Marketing Officer (CMO) Council அமைப்பின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. அடிமட்டம் முதல் மேல் மட்டம் வரை பாரிய எண்ணிக்கையில் நுகர்வோரை சம்பாதித்து, நுகர்வோரை மையமாகக் கொண்ட அணுகுமுறையைப் பேணி, தரம் உட்பட பல்வேறு அளவுருக்களின் அடிப்படையில் நுகர்வோரின் மத்தியில் சாதகமான தோற்றப்பாட்டினையும், வர்த்தகநாமத்தைப் பொறுத்தவரையில் உயர்ந்த அளவில் அவர்கள் நினைவில் கொண்டுள்ள தனித்தனி வர்த்தகநாமங்களை இனங்கண்டு, அவற்றிற்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் இவ்விருது வழங்கப்படுகின்றது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பான வகை உற்பத்திப் பிரிவிற்கான பிரதித் தலைமை அதிகாரி அவர்கள் இது தொடர்பில் கூறுகையில், "ஊட்டச்சத்து மிக்க எமது சக்தி வழங்கல் பானத்திற்கு 'Global Master Brand' என்ற கௌரவம் கிடைக்கப்பெற்றுள்ளமையை நாம் போற்றுகின்றோம். சிறந்த ஊட்டச்சத்து மற்றும் உடற்பயிற்சி மிக்க வாழ்க்கை முறை தொடர்பான ஆலோசனைகளை வழங்கி, நுகர்வோரின் வாழ்வில் நற்பலனை ஏற்படுத்தும் முயற்சிகளுக்காக மைலோ தனது நுகர்வோரின் நம்பிக்கையையும், மதிப்பையும் வென்றுள்ளமைக்கு இது ஒரு சிறந்த சான்றாகும். இந்த நாட்டிலுள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் உள்ளங்களையும். சிந்தனைகளையும் எட்டியுள்ளமை மட்டுமன்றி, தினசரி ஐந்து இலட்சம் இலங்கை மக்களை வளப்படுத்தி, பூரிப்படையச் செய்ய உதவி வருகின்ற எமது மைலோ வர்த்தகநாமம், எமக்கு பெருமை சேர்ப்பித்துள்ளது," என்று குறிப்பிட்டார்.

இந்த ஆண்டில் மேலும் பல பெருமதிப்பு மிக்க விருதுகளையும் மைலோ வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக வென்றுள்ள 'ஆண்டின் மிகச் சிறந்த மாணவர்

பான வகை வர்த்தகநாமம்' என்ற விருதும் மற்றும் அண்மையில் இடம்பெற்ற 2016 ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதி விளையாட்டு விருதுகள் நிகழ்வில் வென்ற 'ஆண்டின் மிகச் சிறந்த கனிஷ்ட விளையாட்டு ஊக்குவிப்பாளர்' என்ற விருதும் அவற்றுள் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகில் முன்னிலை வகிக்கும் ஒரு சொக்கிலேட் மோல்ற்று பான உற்பத்தி வகையாகத் திகழ்ந்து வரும் மைலோ, இலங்கையில் மிகவும் நேசிக்கப்படுகின்ற மற்றும் நம்பிக்கை மிக்க வர்த்தகநாமமாக, பல தலைமுறைகளாக இலங்கை சிறுவர்களை மகிழ்வித்து வந்துள்ளது. அதன் தனித்துவமான மற்றும் அற்புதமான சொக்கிலேட் மோல்ற்று சுவைக்காக மிகுந்த பிரபலம் பெற்றுள்ளதுடன், உள்நாட்டில் பெறப்படும் புத்தம்புதிய பாலைக் கொண்டு, விட்டமின்கள் மற்றும் கனியுப்புக்களின் செழுமை நிரம்பியதாக அது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. நுகர்வோர் தமது கனவுகளை நனவாக்குவதற்கு அவர்களுக்கு உதவி, அவர்களை ஊக்குவித்து, விளையாட்டுக்கள், சக்தி மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றின் சாதகமான பரிமாணங்களை அது வெளிப்படுத்தி வருகின்றது. இரு தசாப்த காலத்திற்கும் மேலாக இலங்கையில் பாடசாலை மட்டத்தில் விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்வதற்கு அது உதவி வந்துள்ளது.